**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
சார்பு நீதிபதி, சீர்காழி
*******

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 03–ம் நாள் புதன் கிழமை
**அசல் வழக்கு எண். 214/2022 ல் இடைமனு எண். 3/2021 ல்**
**இடைமனு எண். 6/2025**

ராமு ...மனுதாரர்/ எதிர்மனுதாரர் /பிரதிவாதி

...எதிர்...

பக்கிரிசாமி ...எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 27.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. இ. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. வி.தியாகராஜன் அவர்கள் ஆஜராகிய நிலையிலும், இருதரப்பும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் **IA.No.3/2021 in O.S.No.214/2022** மனுவில் வழக்கறிஞர்/ஆணையர் மற்றும் சர்வேயர் அறிக்கை மற்றும் வரைபடம் குறித்து மனுதாரர் ஆட்சேபணையை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையை ஏற்று உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கு மனுதார் மீது எதிர்மனுதார்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும், வசப்பாரிகாரத்திற்கும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி IA.No.3/2021ல் வழக்கறிஞர்/ஆணையர் மற்றும் அவருக்கு உதவியாக சர்வேயர் கமிஷனர் நியமிக்கப்பட்டு, தாவா வழக்கு சொத்தை 06.03.2025 அன்று அளவீடு செய்து சீர்காழி சார் ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சர்வேயர் மற்றும் வழக்கறிஞர்/ஆணையர் சொத்தை அளவீடு செய்யும் போது தாவா

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.03 18:01:21 +0530

சொத்துக்களின் ஆவணங்களையும், பட்டாவையும் சரிவர கவனிக்காமல் ஒரு தலைபட்சமாக எதிர்மனுதாரர்/வாதிக்கு சலுகை செய்ய வேண்டும் என்ற நோக்கில் மேற்படி ஆய்வறிக்கையையும், வரைபடத்தையும் தாக்கல் செய்துள்ளனர். அதனை மறுத்து மேற்படி அட்வேகேட்/ கமிஷனர் ஆய்வறிக்கைக்கும் சர்வேயர்/கமிஷனர் ஆய்வறிக்கைக்கும் மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்ய முடியவில்லை. ஆகையினால் மனுதாரரின் அட்சேபணையை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன் வழக்கறிஞர்/ஆணையர் மற்றும் சர்வேயர் தாக்கல் செய்துள்ள வரைபடம் மற்றும் அறிக்கையை குறித்து தாக்கல் செய்த ஆட்சேபணையை ஏற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு தாக்கல் செய்த ஆட்சேபணை மனுவின் சுருக்கம்.</u>**

மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்/வாதி வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வன்மையாக மறுக்கின்றார். மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி இந்த வழக்கில் IA.No/3/2021ல் வழக்கறிஞர்/ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, சர்வேயர் உதவியுடன் 28.05.2024 அன்று அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது உண்மை. ஆனால் மீண்டும் அட்வகேட் கமிஷனர் நியமனம் செய்து தாவா வழக்கு சொத்தை அளந்து புதியதாக ஆய்வறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யப்பட வேண்டும் என கூறியுள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி இந்நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்ட அட்வகேட்/கமிஷனர் மற்றும் நிள அளவையரால் கடந்த 06.03.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்ட வரைபடம் மற்றும் அறிக்கைகளை அந்த தேதியிலேயே பெற்றுக் கொண்ட பிறகு அந்த அறிக்கையின் மீது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் இருந்ததோடு வழக்கில் வாதியின் முதல் விசாரணை முடிந்த பிறகு எவ்விதமான ஆட்சேபணையையும் தாக்கல் செய்ய மனுதாரருக்கு உரிமையில்லை. மேலும் அட்வகேட் கமிஷ்னர் மற்றும் நிள அளவையரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் மாண்பமை நீதிமன்றம் மேற்படி வழக்கறிஞர் ஆணையர் மற்றும் நிள அளவையர் அவர்களுக்கு உத்தரவிட்டு ஒரு துணை அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட பிறகு அந்த அறிக்கையும் மாண்பமை நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்தால் மட்டுமே மற்றொரு வழக்கறிஞர்/ஆணையர் மற்றும் நிள அளவையர் ஆகியோரை நியமனம் செய்ய

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.03 18:01:27 +0530

இயலாது என்ற நிலையில் நீதிமன்றத்தின் முன்பு இந்த வழக்கறிஞர்/ ஆணையர் மற்றும் நிள அளவர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆய்வறிக்கை தள்ளுபடி செய்ய இயலாது என்பது நீதிமன்றத்தின் முன்பு இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்படும் முக்கிய எதிருரை சங்கதியாகும். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணை மனுவை கூடுதல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

**<u>3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?</u>**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்? மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? என்பதேயாகும்.

**<u>4. தீர்வு :</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வசப்பரிகாரத்திற்காக மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் நியமிக்க கோரி IA.No.3/2021 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் வழக்கு சொத்தை பார்வையிட்டு 06.03.2025 அன்று ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், சொத்துக்களின் ஆவணங்களையும், பட்டாவையும் சரிவர கவனிக்காமல் வாதிக்கு சலுகை செய்யும் நோக்கில் ஆய்வறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரரின் கவன குறைவு காரணமாக மேற்படி அறிக்கைக்கு உரிய காலத்திற்குள் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே காலதாமத்தை மன்னித்து வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் அறிக்கைக்கு இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையை ஏற்க கோரியுள்ளார். இதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் 06.03.2025 தேதியிலேயே அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் பெற்றுக்கொண்ட பிறகும், காலதாமதமாக உள்நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையை ஏற்க வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

5. வழக்கு ஆவணங்களின் பரிசீலனையில் அசல் வழக்கில் விசாரணை துவங்கப்பட்டு வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் அறிக்கை வா.சா.1ன் மூலம் நீம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.03 18:01:34 +0530

செய்யப்பட்டு, அசல் வழக்கு வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக உள்ள நிலையில் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் கவன குறைவால் உரிய காலத்திற்குள் ஆட்சேபணையை தாக்கல் செய்யவில்லை என்றும், காலதாமத்தை மன்னித்து ஆட்சேபணையை ஏற்க கோரியுள்ளார். அசல் வழக்கில் இருதரப்பினர்களுக்கும் உரிய வாய்ப்பு அளித்து தகுதியின் அடிப்படையில் தீர்வு காண ஏதுவாக, மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளித்து வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் அறிக்கைக்கு ஆட்சேபணையை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து, மேற்படி ஆட்சேபணையை ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

6. **முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று (03.12.2025) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.03 18:01:39 +0530

சார்பு நீதிபதி, சீர்காழி

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | –இல்லை |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | –இல்லை |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | –இல்லை |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | –இல்லை |

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய/வரைவு உத்தரவு
இ.ம.எண்.6/2025
இ.ம. எண். 3/2021–ல்
அ.வ.எண்.214/2022–ல்
நாள் –03.12.2025